பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

05 01 2025 **SUNDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தில்லியில் 12 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கிவைத்தார்.

2. இந்தியாவின் மெட்ரோ ரயில் கட்டமைப்பு உலகின் மூன்றாவது பெரிய மெட்ரோ ரயில் கட்டமைப்பாக உருவெடுத்துள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

3. தமிழின் தொன்மை சிறப்பு குறித்த ஆய்வுகளுக்கு ஊக்கம் அளிக்க மூன்று புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

4. பெரம்பலூர் மாவட்டத்தில் அரசு மருத்துவக்கல்லூரி தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

5. பிரிட்டன் ஓபன் ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனஹத் சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-- இனி விரிவான செய்திகள் ----

<<<<<<>>>>>>

தில்லியில் 12 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கிவைத்தார்.

சாஹிபாபாத் - நியூ அசோக் நகர் இடையே நான்காயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான நமோ பாரத் வழித்தடத்தில் ரயில் சேவையை தொடங்கிவைத்த பிரதமர், பின்னர் நமோ பாரத் ரயிலில் பயணம் மேற்கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

அதன்பின், தில்லி ரோஹினி பகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், தில்லியின் வளர்ச்சிக்காக பிஜேபி அயராது பாடுபட்டு வருவதாக கூறினார்.

கடந்த பத்தாண்டுகளில் மெட்ரோ இணைப்பு வசதியை மேம்படுத்தியதன்மூலம், நகர்ப்புற போக்குவரத்தை வலுப்படுத்தி, மக்களின் வாழ்க்கையை எளிதாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

சேவை மனப்பான்மையுடன் நல்லாட்சியை வழங்கி, தங்களின் எதிர்பார்ப்புகளை பிஜேபி-யால் மட்டுமே பூர்த்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கை தில்லி மக்களிடம் ஏற்பட்டிருப்பதாகவும் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

இந்தியாவின் மெட்ரோ ரயில் கட்டமைப்பு உலகின் மூன்றாவது பெரிய மெட்ரோ ரயில் கட்டமைப்பாக உருவெடுத்துள்ளது என தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இன்று அவர் வெளியிட்டுள்ள பதிவில், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வை காரணமாக மெட்ரோ ரயில் கட்டமைப்பு நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

முன்பு, ஐந்து நகரங்களில் 248 கிலோமீட்டர் தொலைவுக்கு மட்டுமே இயக்கப்பட்ட மெட்ரோ ரயில் சேவை தற்போது, 23 நகரங்களில் ஆயிரம் கிலோமீட்டர் தொலைவுக்கு மேல் இயக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்த ரயில்களில் பயணம் செய்வோரின் எண்ணிக்கையும் நாள் ஒன்றுக்கு 28 லட்சத்திலிருந்து, ஒரு கோடியை எட்டியுள்ளதாக திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்ற அனைத்துத்துறைகளிலும் பெண்களின் தீவிர பங்களிப்பு அவசியம் என்று மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி வலியுறுத்தியுள்ளார்.

கோவை அவினாசிலிங்கம் நிகர்நிலை பல்கலைக்கழகத்தின் 36-ஆவது ஆண்டு பட்டமளிப்பு விழாவில், அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியருக்கு பதக்கங்களை வழங்கி அவர் பேசினார்.

மகளிர் தலைமையிலான மேம்பாடு என்பது பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை உறுதி செய்யும் என்று குறிப்பிட்ட திருமதி அன்னபூர்ணா தேவி, குடும்பம் மற்றும் சமூகத்தை கவனித்துக்கொள்ளும் அர்ப்பணிப்பு மிக்கவர்களாக பெண்கள் திகழ்வதாகவும் கூறினார்.

<<<<<<>>>>>>

போட்டித்தேர்வுகளை மாணவர்கள் அச்சமின்றி எதிர்கொள்ளும் வகையில், பிரதமர் திரு நரேந்திர மோடி எழுதிய தேர்வு வீரர்கள் என்ற நூலை ஐந்தாயிரம் மாணவர்களுக்கு, மாநில ஆளுநர் திரு ஆர் என் ரவி இன்று வழங்கினார்.

ஆளுநர் மாளிகையில், தனியார் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த மாணவர்களுக்கான சுற்றுலா பயணத்தை தொடங்கிவைத்த அவர், இந்த நூல் மாணவர்களுக்கு வாழ்நாள் வழிகாட்டியாக திகழும் என்றும் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தமிழின் தொன்மை சிறப்பு குறித்த ஆய்வுகளுக்கு ஊக்கம் அளிக்க மூன்று புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் என முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற சிந்துவெளி பண்பாட்டு கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு பன்னாட்டு கருத்தரங்கை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

*(வாய்ஸ் பைட் - மு.க. ஸ்டாலின் - 46 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய மாநிலச்செயலாளராக திரு பெ.சண்முகம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

விழுப்புரத்தில் இன்று நடைபெற்ற அக்கட்சியின் 24-ஆவது மாநில மாநாட்டில் அவர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

தற்போதைய செயலாளர் திரு கே பாலகிருஷ்ணனின் பதவிக்காலம் நிறைவடைந்ததையடுத்து, இப்பதவிக்கு திரு பெ. சண்முகம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அவர், தற்போது கட்சியின் மத்தியக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்து வருகிறார்.

<<<<<<>>>>>>

மத்திய அரசின் அனுமதி பெற்று பெரம்பலூர் மாவட்டத்தில் அரசு மருத்துவக்கல்லூரி தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இம்மாவட்டத்தில் உள்ள கொளக்காநத்தம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 50 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வட்டார பொது சுகாதார பிரிவை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்துவைத்தபின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

சுகாதாரத்துறையில் காலியாக உள்ள இரண்டாயிரத்து 553 மருத்துவர் பணியிடங்களை நிரப்ப இன்று தேர்வு நடத்தப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாநில அரசின் "இதயம் காப்போம்" திட்டத்தின்மூலம், கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 13 ஆயிரத்து 673 பேர் பயனடைந்திருப்பதாகவும் திரு மா.சுப்பிரமணியன் கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மற்றும் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் இந்தாண்டு தேர்ந்தெடுக்கப்படவுள்ள அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் எண்ணிக்கை குறித்த விவரங்களை வெளியிட வேண்டும் என்று பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 2024-ஆம் ஆண்டு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம், 10 ஆயிரத்து 375 ஆசிரியர்களும், உதவி பேராசிரியர்களும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்ட நிலையில், ஒருவருக்குக்கூட பணிநியமனம் வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

திமுக, தேர்தல் அறிக்கையில் உறுதி அளித்தபடி, ஐந்து லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் எனவும் திரு அன்புமணி ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>

நீலகிரி மாவட்டத்தில், விவசாயம் செழித்தோங்கவும், இந்த ஆண்டு சிறப்பாக அமைய வேண்டியும், தோடர் பழங்குடியின மக்கள் மொற்ட்வர்த் திருவிழாவை இன்று கொண்டாடினர்.

இதில், மாவட்டத்தில் உள்ள 70-க்கும் மேற்பட்ட மந்துகளை சேர்ந்த தோடர் பழங்குடியின ஆண்கள் உற்சாகமாக கலந்துகொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - சரவணன் - 48 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

விழுப்புரத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான இணைப்புச்சக்கரம் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர் வாகனங்களை வனத்துறை அமைச்சர் திரு பொன்முடி இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

----------------

சென்னை கொளத்தூர், திரு வி கா நகர் சட்டப்பேரவைத் தொகுதிகளில் பொதுமக்களிடம் மாநில அமைச்சர் திரு சேகர்பாபு வீதி வீதியாக சென்று குறைகளை கேட்டறிந்தார்.

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

பிரிட்டன் ஓபன் ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனஹத் சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பெர்மிங்ஹாமில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான காலிறுதி ஆட்டத்தில் அவர், 11-6, 11-7, 11-7 என்ற செட் கணக்கில், எகிப்தின் **Nadia Tamer-**ஐ வென்றார்.

-----------

மாற்றுத்திறனாளிகள் பங்கேற்கும் சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

விக்ராந்த் ரவீந்திர **Keni** தலைமையிலான இந்த அணியில் 17 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கையில் இம்மாதம் 12-ஆம் தேதிமுதல், 21-ஆம் தேதிவரை இப்போட்டி நடைபெறவுள்ளது.

இந்தியா தனது முதல் ஆட்டத்தில் பாகிஸ்தானை எதிர்கொள்கிறது

-------

புதுதில்லியில் நடைபெற்ற தேசிய துப்பாக்கிச்சுடுதல் போட்டியின் பத்து மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் வருண் தோமர் தங்கப்பதக்கத்தையும், ப்ரதியும் சிங் வெள்ளிப்பதக்கத்தையும், ஆகாஷ் பரத்வாஜ் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

**<<<<<<END>>>>>>**